# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1959/20 - 2016 මාර්තු මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.03.24

*1959/20 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மார்சு மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்***

*4(2) ஆம் பிரிவின் கீழான பிரசுரிப்பு*

*இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன் பின்னர் "நிறுவகம்" என குறிப்பிடப்படும்) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 1995 ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள, முன்னிலைப்படுத்தல் மற்றும் வெளிக்காட்டல்களுக்கான வழிகாட்டிகள் - 2011 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க காப்புறுதித் தொழில்துறையின் (திருத்த) ஒழுங்குவிதியின் 53 ஆம் பிரிலின் கீழ் ஆயுள் மற்றும் பொதுக் காபப்புறுதி வியாபாரங்களை பிளவுபடுத்தல் வழிகாட்டிகளை கடைப்பிடிக்கின்றது. இந்த மாற்றங்கள் இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு பெப்புநிவரி மாதம் பதினெட்டாம் திகதியில் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் காலத்தை அடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது.*

பேரவையின் கட்டளைப்படி,

*அருண அல்விஸ்,*
*செயலாளர்.*

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,
இல: *30* ஏ, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
*2016*, மாச்சு *24*.

# முன்னிலைப்படுத்தல் மற்றும் வெளிக்காட்டல்களுக்கான வழிகாட்டிகள் - 2011 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையின் (திருத்த) ஒழுங்குவிதியின் 53 ஆம் பரிவன் கீழ் ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களை பிளவுபடுத்தல்

**உள்ளடக்கம்**

*1.* அறிமுகம் ;
*2.* நோக்கெல்லை ;
*3.* வெளிக்காட்டற் தேவைப்பாடுகள்.

**1. அறிமுகம் :**

*2011 ஆண்டின் 3ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையின் (திருத்த) ஒழுங்குவிதியின் 53 ஆம் பிரிலின் பிரகாரம், பலவகை காப்புறுதி வசதிகளை வழங்கும் காப்புறுதிக் கம்பனிகள் எல்லாம் அவற்றின் ஆயுள் மற்றும் ஆயுள் சாராத காப்புறுதி வியாபாரங்களை இரு வேறு சட்டரீதியான உரிமங்களாக பிரிக்கவேண்டுமென கேட்கப்பட்டுள்ளன. காப்புறுதித் தொழிற்துறையுடன் கலந்து ஆலோசித்த பின்னர் இலங்கைக் காப்புறுதிச் சபை (IBSP) ஒத்திசைவுக்கான காலஎல்லையை 2015, சனவரி 01ந் திகதியாக நிர்ணயித்ததுடன், அந்த திகதியுடன் செயன்முறையின் ர்த்திக்குவழிவகுக்கும் பிரதான கட்டங்களுடன் கூடிய கால அட்டவணையை தயாரித்துள்ளது.*

இந்த வழிகாட்டியானது விசேடமாக, ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் அல்லாது, தனியான நிதிக் கூற்றுக்களில் கவனம் செலுத்துகின்றது. குழுமக் கண்ணோட்டத்தில், அந்தக் குழுமம் ஆயுள் மற்றும் பொதுவான வியாபாரங்கள் இரண்டையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதனால், தொழிற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவரும் நிலை ஏற்படுவதில்லை.

*காப்புறுதி வியாபாரத்தினை பிரிக்கும்போது மாற்றப்படும் சொத்துக்களின் முன்கொணரற் தொகை அடிப்படையில் ஒரு விற்பனை ஊடுசெயலின்மூலம் அன்றி தொடரும் பயன்பாட்டின் மூலமாக மீளப்பெறப்படுகின்ற காரணத்தினால், இந்தப் பிளவுபடுத்தலானது விற்பனைக்காக வைத்திருக்கப்படும் சொத்துக்களின் பொருள் வரையறையினைத் திருப்தி செய்யாது. உரிமம், சொத்துக்களின் பெறுமதியை உப கம்பனியில் முதலீடாகப் பெறுகின்றபோதிலும், அந்த முதலீடு, கம்பனி அவற்றின் விற்பனையினை திட்டமிடாதபோது, தொடர்ச்சியான பயன்பாட்டின் மூலமாக மாத்திரம் தேறப்படும்.*

*அடக்கத்தில் இந்தப் பிளவுபடுத்தலானது தொழிற்பாட்டு முறையில் ஒரு மாற்றம் அல்லது காப்புறுதி வியாபாரத்தை மீள்கட்டமைப்புச் செய்வதாகும். அத்தகைய மீள்கட்டமைப்பின் கீழ் உரிமம், சொத்துக்கள் மீதான கட்டுப்பாட்டை இழக்கவில்லை என்பதையும், அதன் காரணமாக அந்தச் சொத்துக்கள் விற்கப்பட்டவையாக கொள்ளமுடியாது என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். எனவே, காப்புறுதி வியாபாரத்தின் பிளவுபடுத்தலினை* SLFRS 5 "*விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் முடிவுக்குக் கொண்டுவரப்படும் தொழிற்பாடுகள்*" என்னும் நியமத்தின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்டதாக கொள்ளப்படும்.

*இந்தப் பிரயோக வழிகாட்டியின் குறிக்கோள், நிதியறிக்கையிடற் தேவைகளுக்காக பொதுவான சட்டகமொன்றின் கீழ் காப்புறுதிக் கம்பனிகளின் பிளவுபடுத்தலின் வெளிக்காட்டல்கள் மற்றும் முன்னிலைப்படுத்தலின் கொள்கை மாறாத பிரயோகத்தினை உறுதி செய்தலாகும்.*

**2. நோக்கெல்லை :**

*காப்புறுதி வியாபாரம் கீழ்வரும் சகல நிபந்தனைகளையும் நிறைவுசெய்யும் பட்சத்தில், இந்த வழிகாட்டல் கட்டாயமானதாகும் :*

*2.1* *பிளவுபடுத்தலானது 2011 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையின் (திருத்த) ஒழுங்குவிதியின் பிரிவு 53 க்கு ஒத்திசைதல்.*

*2.2* *மேற்குறிப்பிட்ட ஒழுங்குவிதியின் கீழ் காப்புறுதி வியாபார பிளவுபடுத்தலுக்கு முன்னரும் உடனடியாகப் பின்னரும் உரித்துடைமைக் கட்டமைப்பு* (ownership structure) *மாற்றம் அடையாமலிருத்தல்.*

*2.3* *கீழே விபரிக்கப்பட்ட வியாபார கட்டமைப்புக்களுக்கு பிரயோகிக்கக்கூடியதாக இருத்தல் :*

- *உபகம்பனிகளின் மீதான கட்டுப்பாட்டை கொண்டிருக்கும் அதேவேளை பங்குப் பரிவர்த்தனை மூலம் தற்போதுள்ள மேன்னிலைக் கம்பனியின்கீழ் இரண்டு புதிய உப கம்பனிகளை உருவாக்குதல். ஒரு உப கம்பனி ஆயுட் காப்புறுதி வியாபார சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை கொண்டிருப்பதுடன், மற்றைய கம்பனி பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்புபட்ட சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை கொண்டிருக்கும்.*

- உப கம்பனி மீது கட்டுப்பாட்டை கொண்டுள்ள அதேவேளை பங்குப்பரிவர்த்தனை மூலம் மேன்னிலைக் கம்பனியின் ஒரு புதிய உபகம்பனியை உருவாக்குதல். மேன்னிலைக் கம்பனியும் புதிய உப கம்பனியும் சேர்ந்து வெவ்வேறாக ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்கள் தொடர்புபட்ட சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை கொண்டிருக்கும்.

3. **வெளிக்காட்டற் தேவைப்பாடுகள் :**

உரிமம் நேர்மையான முன்னிலைப்படுத்தலை பிரதிபலிக்கும் வகையில் மீள்கட்டமைப்பின் தாக்கத்தை பிரதிபலிப்பதற்காக அதன் வேறான நிதிக்கூற்றுக்களில் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பாக கீழ்வரும் தகவல்களை வெளிக்காட்டும் :-

(a) பிளவுபடுத்தப்பட்ட தொழிற்பாட்டின் வரிக்குப்பிந்திய இலாபம் அல்லது நட்டத்தின் மொத்தத்தினைக் காட்டும் தனியொரு தொகை ;

(b) மேலே (a) யிலுள்ள தனித்தொகையின் கீழ்வரும் பகுப்பாய்வு:-

(i) பிளவுபடுத்தப்பட்ட தொழிற்பாட்டு வருமானம், செலவுகள் மற்றும் வரிக்கு முந்திய இலாபம் அல்லது நட்டம் ; அத்துடன்

(ii) LKAS 12 இன் பந்தி 81 (h) இல் தேவைப்படுத்தியவாறு, தொடர்புபட்ட வருமானவரிச் செலவு.

(c) பிளவுபடுத்தப்பட்ட தொழிற்பாடுகளின் தொழிற்பாட்டு, முதலீட்டு மற்றும் நிதியளிப்பு நடவடிக்கைகள் தொடர்புபட்ட நிகர காசுப்பாசீசல்கள் ;

(d) மேன்னிலைக் கம்பனியின் பங்குதாரர்களுக்குரிய தொடரும் தொழிற்பாடுகள் மற்றும் பிளவுபடுத்தப்பட்ட தொழிற்பாடுகளிலிருந்தான வருமானத் தொகை.

3.1 மேலதிக வெளிக்காட்டல்கள்

உரிமம் வேறான நிதிக்கூற்றுக்களுக்கு குறிப்புக்களாக கீழ்வரும் மேலதிகத் தகவல்களையும் வெளிக்காட்டும் :-

(a) பிளவுபடுத்தப்பட்ட காப்புறுதி வியாபாரத் தொழிற்பாட்டின் விபரம் ;

(b) பிளவுபடுத்திய காப்புறுதி வியாபாரத்தின் உண்மைகள் மற்றும் புறநிலை பற்றிய விபரம்.

மேலும், நேர்மையான முன்னிலைப்படுத்தலை அடையும்பொருட்டு, நிதிக்கூற்றுக்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக காப்புறுதித் தொழிற்பாடுகளின் பிளவுபற்றிய பின்னணித் தகவல்களை தனியான மற்றும் குழும நிதிக்கூற்றுக்கள் இரண்டிலும் வேறாக, விளக்கமான வெளிக்காட்டற் குறிப்பினை உள்ளடக்குதல் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

04-525

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.